**தேதி :** 11.05.2026 **CC.No. :** 102/2018 PW :1 ஜெயலட்சுமி

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் முதல்விசாரணையில் சொன்னதைத் தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். என்னுடைய கணவர் என்னை கல்லால் அடித்தபோது வீட்டில் யார் இருந்தார்கள் என்றால் யாருமில்லை. என்னுடைய வீட்டின் அருகே பெட்ரோல் பல்க், ஒர்க் ஷாப் உள்ளது என்றால் சரிதான். அப்போது அங்கு 20 நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் இருந்திருப்பார்கள். என்னுடன் என்னுடைய மகள் மருத்துவமனைக்கு வந்தார். அவர் சம்பவத்தை நேரில் பார்த்தார் என்றால் சரிதான். நான் இந்த விபரத்தை போலீசாரிடம் சொன்னேன். எங்கள் வீட்டிலிருந்து அரசு மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்றால் கால் மணிநேரம் ஆகும்.

நான் மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் அங்கு வந்து சம்பவநாள் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் வெள்ளைப்பேப்பரில் கையெழுத்து போட்டு கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனக்கு எழுதப் படிக்க தெரியும். நான் புகார் மனு ஏன் கைப்பட எழுதிக்கொடுக்கவில்லை என்றால் அப்போது நான் தலை கிறுக்கமாக இருந்ததினால் எழுதிக்கொடுக்கவில்லை. சம்பவயிடத்திலேயே எனக்கு இரத்தம் அதிகமாக வந்தது. இதனை போலீசார் விசாரணையில் சொன்னேன். நான் சொல்லச் சொல்ல புகார் வாக்குமூலம் போலீசார் எழுதினார். என்னுடன் மருத்துவமனையில் என் மகள் மட்டும் இருந்தார்.

எனக்கும், எனது கணவருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக பகையை கொண்டு பொய்யான புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.05.19 13:06:32 +0530

<u>**வாக்குமூலம்**</u>

<u>**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**</u>

<u>**வழக்கு எண் : CC.No.102/2018**</u>

<u>**வழக்கு சாட்சி PW-2**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேகர் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | மாரியப்பன் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | மேலக்கடையநல்லூர் | வயது | : | 40 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Monday of 11.05.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் மேலக்கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஜெயலட்சுமியை எனக்கு தெரியும். எதிரியை எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.05.19 13:06:38 +0530